செ.வெ.எண்.01 நாள்.01.12.2017.

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், பணகுடியில் அண்மையில் பெய்த மழையினால் வெள்ளம் சூழ்ந்துள்ள இடங்களை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள், திருநெல்வேலி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.இராஜேந்திரகுமார்,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

--------

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், பணகுடியில் அண்மையில் பெய்த மழையினால் வெள்ளம் சூழ்ந்துள்ள இடங்களை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள், திருநெல்வேலி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.இராஜேந்திரகுமார்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஐ.எஸ்.இன்பதுரை ஆகியோர் இன்று (01.12.2017) நேரில் சென்று பார்வையிட்டனர்.

பின்னர், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது–

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் அண்மையில் பெய்து வரும் கனமழையால் ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் மீட்பு பணிகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு ஆணையிட்டுள்ளார்கள். அதனைத் தொடர்ந்து, திருநெல்வேலி மாவட்டத்தில் தண்ணீர் செல்லும் பாதைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றப்பட்டு வருகிறது. அனுமன் நதியில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கு காரணமாக இராதாபுரம் வட்டம், பணகுடி பகுதியில் வியாபாரிகள் பாதிப்புக்குள்ளாயினர். அவர்களின் கோரிக்கையினை அரசு பரிசீலித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், பணகுடி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சூழ்ந்துள்ள வெள்ள நீரினை உடனடியாக வெளியேற்றவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சுகாதார நிலையத்தினை சுற்றி, சுற்றுச்சுவர் கட்டுவதற்கான பணிகளை உடனடியாக மேற்கொள்ள சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், வெள்ள நீர் சூழ்ந்துள்ள பகுதிகளில் சுகாதார சீர்கேடு மற்றும் தொற்று நோய் பரவமால் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள சுகாதார அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்க சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அவர்களுக்கு தேவையான குடிநீர், கழிப்பிட வசதி, மருத்துவ வசதி மற்றும் உணவு போன்ற அத்தியாவசிய பொருட்கள் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் மாவட்ட நிர்வாகத்தால் மீட்பு பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. அனைத்து துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறார்கள். எனவே, பொதுமக்கள் எவ்வித அச்சமும் அடைய வேண்டாம் என தெரிவித்தார்.

முன்னதாக, இராதாபுரம் வட்டம், பணகுடி மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம், நாகர்கோவில்–பணகுடி சாலையில் தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கி அருகில், சிட்டி சென்டர் காம்ப்ளக்ஸ், பணகுடி சிவன் கோவில், அனுமன் நதி கரை ஆகிய பகுதிகளில் அண்மையில் பெய்த மழையினால் வெள்ளம் சூழ்ந்துள்ள இடங்களை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள், திருநெல்வேலி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.இராஜேந்திரகுமார்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஐ.எஸ்.இன்பதுரை ஆகியோர் அலுவலர்களுடன் நேரில் சென்று பார்வையிட்டனர்.

ஆய்வின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்,இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.மாஹின் அபுபக்கர், முக்கிய பிரமுகர்கள் திரு.சுப்பையாபாண்டியன், திரு.தச்சை கணேசராஜா, திரு.தவசிமுத்து, திரு.அழகானந்தம் உள்பட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.